# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 380/ந/2025, நாள் 12.02.2026

P.S. அந்தோணிதாஸ்,
த/பெ. M.L. சவுரிதாஸ் (லேட்),
15/267/A2, நாயுடு புரம்,
கொடைக்கானல்,
திண்டுக்கல் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி,
திண்டுக்கல் மாவட்டம். – எதிர்மனுதாரர்

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல், நாயுடுபுரம் அஞ்சல், 15/267/A2 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. P.S. அந்தோணிதாஸ், த/பெ. M.L. சவுரிதாஸ் (லேட்), என்பவரின் நாளிடப்படாத மனு இம்முறைமன்ற நடுவத்தில் 10.11.2025 அன்று பெறப்பட்டு, 380/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல், நாயுடுபுரம் அஞ்சல், 15/267/A2 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. P.S. அந்தோணிதாஸ், த/பெ. M.L. சவுரிதாஸ் (லேட்), என்பவரின் நாளிடப்படாத புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

“நான் கொடைக்கானல் நகராட்சியில் 1978-ம் ஆண்டில் தினக்கூலி பணியாளராக Water supply leak arrest என்ற பணியில் 15.03.1978-ல் பணியமர்த்தப்பட்டேன். எனக்கு பிறகு 1990 முதல் 1995 வரை நகராட்சி குடிநீர் வழங்கும் பிரிவு மற்றும் பொறியியல் பிரிவு தெரு விளக்கு பிரிவு மற்றும் நகராட்சிக்கு வரவேண்டிய பல்வேறு தொகைகளை வசூல் செய்வதற்கும் என்னைப் போன்று தினக்கூலி அடிப்படையில் சுமார் 43 பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டனர். மேற்கண்ட அனைவரிலும் நானே பணிமூப்பில் முதன்மையானவன்.

ஆயினும் என்னை புறந்தள்ளி எனக்குப் பின்னர் தினக்கூலி அடிப்படையில் பணியில் சேர்ந்துள்ள சுமார் 20 நபர்கள் 01.04.2003க்கு முன்னர் பணி வரன்முறை செய்யப்பட்டு ஓய்வூதியம் பெற தகுதியுடையவர்களாக ஆக்கப்பட்டுள்ளனர் இதனை ஆட்சேபித்து பல்வேறு தேதிகளில் நகராட்சி ஆணையருக்கு விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளேன்.

அரசாணை எண். (நிலை) 125, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 27.05.1999ல் உள்ளாட்சி அமைப்புகளில் பணியாற்றும் தினக்கூலி பணியாளர்களின் பணியினை வரைமுறைபடுத்தவும், மாதம் ரூ.2000/- என்ற தொகுப்பூதியத்தில் நுழைவு பணியிடங்களில் அவர்களை பணியமர்த்தியும் ஓராண்டு பணிமுடித்துப் பின்னர் முறையான ஊதிய விகிதத்தில் பணியமர்த்த ஆணையிடப்பட்டது.

அதன்படி 20.03.2001ல் மாத ஊதியம் ரூ.2000/- என தொகுப்பூதியத்தில் மேற்கண்ட 43 தினக்கூலி பணியாளர்களும் முறைப்படுத்தப்பட்டோம். இவர்களுள் பணியில் மூத்தவரான என்னை புறந்தள்ளி 20 தினக்கூலி பணியாளர்களை 01.04.2003-க்கு முன்னர் முறையான ஊதிய விகிதத்தில் நியமனம் செய்துள்ளனர்.

அரசாணை எண். (நிலை) 125, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 27.05.1999ல் கண்ட அரசாணையில் தொகுப்பூதியத்தில் கொண்டுவரப்பட்டு, ஓராண்டில் பணிவரன் முறைபடுத்தி முறையான ஊதிய விகிதத்தில் பணியமர்த்தப்பட வேண்டும் என குறிப்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும், என்னை ஓராண்டு முடிவிற்குப்பின்னர் பணிவரன்முறை செய்யாமல் மூன்றாண்டிற்குப் பின்னர் 21.03.2004-ல் பணிவரன்முறை செய்து கொடைக்கானல் நகராட்சி ஆணையர் உத்திரவிட்டுள்ளார். மாறாக பணியில் எனக்கு இளையவர்களை 01.04.2003க்கு முன்னர் முறையான ஊதிய விகிதத்தில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இதனால் ஓய்வூதியம் பெற நான் தகுதியற்றவனாக உள்ளேன். எனக்கு பின்னால் சுமார் 10 ஆண்டு முதல் 17 ஆண்டுகளுக்கு பின்னால் தினக்கூலி பணியாளர்களாக நியமனம் செய்யப்பட்டவர்கள் ஓய்வூதியம் பெற தகுதி உடையவர்களாக ஆக்கப்பட்டுள்ளனர்.

மேலும், கொடைக்கானல் நகராட்சி ஆணையரின் செயல்முறை ஆணை ந.க. எண்.5931/2016/சி1, நாள் 24.11.2017 மற்றும் ந.க.எண். 8052/2012/சி1, நாள் 25.06.2015–ல் நகராட்சி ஆணையரின் கடிதம் மூலம் கூடுதலாக வழங்கப்பட்ட ஊதியத் தொகையினை பிடித்தம் செய்ய உத்திரவிடப்பட்டு, அதன்படி எனது ஊதியத்திலும் பணப்பிடித்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனை ஆட்சேபித்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் முறையீடு செய்துள்ளேன். அதில் மிகையாக வழங்கப்பட்ட ஊதியப்பிடித்தம் செய்துள்ளதை ரத்து செய்தும், ஏற்கனவே பிடித்தம் செய்த தொகையினை திருப்பி வழங்குமாறு சென்னை உயர்நீதி மன்ற மதுரைக் கிளை உத்திரவு W.P.(M.D) No 18751 of 2018 மற்றும் W.M.P.(MD) No.16588 of 2018, நாள் 24.09.2024 கண்ட நீதிமன்ற உத்திரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, கொடைக்கானல் நகராட்சி ஆணையருக்கு பிடித்தம் செய்த தொகையினைத் திரும்ப வழங்க வேண்டியும், தொடர்ந்து பிடித்தம் செய்யக்கூடாது எனவும் விண்ணப்பம் சமர்ப்பித்தேன். ஆணையர் நீதிமன்ற உத்தரவை மதிக்காமல் நான் பணி ஓய்வுப் பெற்ற நிலையில், எனக்கு வழங்கப்பட வேண்டிய ஓய்வு காலப் பணப்பயனான ஈட்டிய விடுப்பு ஒப்படைப்புத் தொகையிலிருந்து ரூ.1,04,807/-ஐ ஒரே தவணையில் பிடித்தம் செய்து கொடைக்கானல் நகராட்சி ஆணையர், செயல்முறை கடிதம் ந.க. எண்.3799/2015/சி1, நாள் 25.11.2014ல் கண்ட ஆணை மூலம் உத்திரவிடப்பட்டுள்ளது. இது நீதிமன்ற உத்திரவை அவமதிக்கும் செயலாகவே உள்ளது.

எனவே, அய்யா அவர்கள் 1978-ம் ஆண்டு முதல் தினக்கூலி பணியாளராக பணியில் சேர்ந்து தொடர் பணியில் பணிபுரிந்து வந்த என்னை, எனக்கு பின் பணியில் சேர்ந்தவர்களை பணிவரன் செய்துள்ளது போல் 01.04.2003க்கு முன்னர் பணி வரன்முறை செய்தும், ஊதிய ஏற்றமுறையில் என்னையும் சேர்த்து உத்திரவிட வேணுமாய் பணிவுடன் வேண்டுகிறேன். மேலும்,

நீதிமன்ற உத்திரவின்படி கூடுதலாக வழங்கப்பட்டுள்ளதாக கூறி என்னிடம் பிடித்தம் செய்த தொகை முழுவதையும் மீள வழங்கிட ஆவன செய்ய வேணுமாயும் பணிவுடன் வேண்டுகிறேன். இதனை செய்ய தவறும் பட்சத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடுத்து, எனது நியாயத்தை நிலை நாட்டுவதைத் தவிர வேறு எனக்கு வழி இல்லை என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்".

2) மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 19.11.2025 நாளிட்ட அறிவிப்பின் மூலம் கொடைக்கானல் நகராட்சி ஆணையாளரிடம் கோரப்பட்டது.

3) கொடைக்கானல் நகராட்சி ஆணையாளர் தனது கடிதம் ந.க.எண்.1671/2025/சி1 04.12.2025 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்ட விவரங்களை சமர்ப்பித்துள்ளார்:–

- இந்நகராட்சியில் தினக்கூலி பணியாளர்களாக பணிபுரிந்த பணியாளர்களை தகுதியின் அடிப்படையில் காலியாக இருந்த பணியிடங்களில் நகர்மன்ற நியமனக்குழு தீர்மானத்தின் அடிப்படையில் தொகுப்பூதியத்தில் பணிநியமனம் செய்யப்பட்டுள்ளது. அதுபோன்று, தினக்கூலியில் குடிநீர் பணியாளராக பணிபுரிந்த திரு. பி. எஸ். அந்தோணிதாஸ் என்பவர் அரசாணை எண்.198, நாள் 26.10.1998–ன்படி, நகர்மன்ற நியமனக்குழு தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டதன் பேரில் தகுதியின் அடிப்படையில் தொகுப்பூதியத்தில் குடிநீர் பிரிவு பணியாளராக ரூ.1700/- என்ற அடிப்படையில் 20.03.2001ல் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார். அதனைத் தொடர்ந்து, அரசாணை எண் 21, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 23.02.2006-ன்படி, தனியரை காலமுறை ஊதிய ஏற்ற முறையில் ரூ.2550/- அடிப்படை ஊதியத்தில் 23.02.2006 முதல் நிர்ணயம் செய்து உத்திரவிடப்பட்டது. (பணிப்பதிவேடு தொகுதி I, பக்கம் 4-ல் பதிவு செய்யப்பட்டுள்ளது).

- திரு. பி.எஸ். அந்தோணிதாஸ் (ஓய்வு) என்பவரை அரசாணை எண். 198, நாள் 26.10.1998-ன்படி, குடிநீர் பராமரிப்பு பணியாளராக ரூ.1700/- என்ற அடிப்படையில் 20.03.2001-ல் பணியமர்த்தப்பட்டுள்ளார். (தனியரின் பணிப்பதிவேடு தொகுதி – 1, பக்கம் - 4ல் பதிவு செய்யப்பட்டுள்ளது). ஆனால், தொகுப்பூதியத்தில் ரூ.2,000/- என்ற அடிப்படையில் பணியமர்த்தப்பட்டதாக கடிதத்தில் முன்னுக்கு பின்னாக குறிப்பிட்டுள்ளார்.

- அதன் அடிப்பலடையிலேயே, 01.01.2007 முதல் வருடாந்திர ஊதிய உயர்வு பெற்றுள்ளார். 6வது ஊதியக் குழு பரிந்துரையின்படி ஊதியமும் பெற்றுள்ளார். 7 ஆண்டுகளுக்கு பின்னர் தனியரை காலமுறை ஊதிய ஏற்ற முறையில் ரூ.2,550/- அடிப்படை ஊதியத்தில் 23.02.2006-ல் கொண்டுவரப்பட்டதை, எதிர்த்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதிப்பேராணை மனு எண். 11720/2012 and 11721/2012–ன் கீழ் தீர்ப்பு நாள் 08.07.2013–ல் தொகுப்பூதியத்தில் பணிநியமனம் செய்யப்பட்டு, பணியில் சேர்ந்த மூன்று ஆண்டுகளுக்கு பின்னர் காலமுறை ஏற்ற முறைக்கு நியமனம் செய்ய வேண்டும் என உத்திரவிடப்பட்டது. அதன்படி, 20.03.2001-ல் தொகுப்பூதியத்தில் பணிநியமனம் செய்யப்பட்ட திரு. பி.எஸ். அந்தோணிதாஸ் என்பவருக்கு 23.03.2004-ல் பணிவரன்முறை செய்யப்பட்டது. அன்னார் தொடர்ந்த வழக்கு தீர்ப்பின் அடிப்படையிலேயே காலமுறை ஏற்ற முறைக்கு கொண்டுவரப்பட்டது. (தனியரின் பணிப்பதிவேடு தொகுதி –1,

பக்கம் -16-ல் பதிவு செய்யப்பட்டுள்ளது). தன்னிச்சை முடிவாக ஆணையரால் உத்திரவிடப்படவில்லை. மேலும், பணி ஒய்வு பெற்ற 02/2017 மாதம் வரை மாத ஊதியத்திலிருந்து பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் (CPS) கீழ் தொகை பிடித்தம் செய்யப்பட்டுள்ளது.

- திரு. பி.எஸ். அந்தோணிதாஸ், குடிநீர் பிரிவு பணியாளர் (ஒய்வு) சம்மதக் கடிதம் நாள் 28.02.2017-ல் மனுதாரர் தான் வயது முதிர்வின் காரணமாக ஒய்வு பெறவுள்ளதால், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதிப்பேராணை மனு எண். 11357/2015, வழக்கில் இருந்து என்னை விடுவித்துகொள்கிறேன் என்றும், எனக்கு வழங்க வேண்டிய தொகையினை வழங்குமாறும், எனது வக்கீல் மூலம் வழக்கு நீக்கச் சான்று பின்னர் இணைக்கிறேன் எனவும் தெரிவித்துள்ளதனை தொடர்ந்து, தனியரை தணிக்கை பத்தி எண். 18/2023 மற்றும் 73/2014–15க்கு உட்பட்டும், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதிப்பேராணை மனு எண். 11357/2015 மற்றும் 23167/2019-ன் தீர்ப்புக்குட்பட்டும் 28.02.2017வயது முதிர்வின் காரணமாக பணி ஒய்வு பெற அனுமதித்து உத்திரவிடப்பட்டது.

- நீதிமன்ற உத்திரவின்பேரில், 21.03.2004 முதல் பணிவரன் செய்து, 28.02.2017 முடிய பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் (CPS) கீழ் குடிநீர் பிரிவு பணியாளராக பணிபுரிந்து வருகிறோம் என்று தெளிவான மன நிலையில் பணிபுரிந்து ஒய்வு பெற்ற பின்னர் 9 ஆண்டுகள் கழித்து, தன்னை 01.04.2003-க்கு முன்னர் பணிவரன்முறை செய்து உத்திரவிட கோருவதும், பங்களிப்பு ஓய்வூதியத்தில் இருந்து பழைய ஓய்வூதியத்திற்கு நூதன முறையில் மாற்றம் செய்ய கோருவதும் நகராட்சி சட்ட விதிகளுக்கு முரணானதாகவும், எதிரானதாகவும் உள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

- திரு.பி.எஸ். அந்தோணிதாஸ் (ஒய்வு) என்பவர் CPS FINAL SETTLEMENT வழங்க கோரி 23.12.2020 மற்றும் 04.03.2021 ஆகிய தேதிகளில் கருத்துரு சமர்ப்பித்துள்ளார். இந்நகராட்சி 04.08.2021-ம் தேதிய கடிதத்தின் வாயிலாக திரு. பி.எஸ் அந்தோணிதாஸ் என்பவருக்கு பங்களிப்பு ஓய்வூதியத் தொகை வழங்கக்கோரி, ஆணையர் கருவூல கணக்கு ஆணையரகம் பங்களிப்பு ஓய்வூதிய திட்டப் பிரிவு, சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டதில், அன்னாருக்கு ரூ.246336/- பங்களிப்பு ஓய்வூதியத் தொகை அனுமதித்து உத்திரவிடப்பட்டது. அதனை தொடர்ந்து IFHRMS மூலம் பட்டியல் சார் கருவூலகம், கொடைக்கானல் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு, அன்னாரது வங்கி கணக்கில் ரூ.2,46,336/- வரவாக்கம் செய்யப்பட்டது.

- தனியருக்கு முன்னுரிமையின் அடிப்படையில் பணி வழங்கப்படவில்லை எனில் அன்றைய நாளிலேயே நீதிமன்றத்தை நாடி, தகுதியான காலிப் பணியிடங்களுக்குரிய பணி நியமன உத்திரவு பெற்றிருக்கலாம். பணி ஓய்வு பெறுவதற்காக வழக்கிலிருந்து விலகுவதும், பின்னர் வழக்கு தொடர்வதும் போன்ற செயல்பாடுகளில் இவர் முன்னுக்கு பின் முரணானவர் என தெரியவருகிறது.

- ஒரு நபர் குழுவின் பரிந்துரையின்படி, அரசாணை எண். 338 நிதித் (ஊதியக்குழு), துறை, நாள் 26.08.2010ல் தொழில் நுட்ப வகை சார்ந்த பணியிடங்களாக

(1) Supervisor posts (2) Special grade Trade posts (3) Grade – I (Promotions) posts (4) Grade – II (entry level) posts and (5) Other Trade posts என தொழில் நுட்ப வகை பணியிடங்களாக மாற்றம் செய்து ஊதிய விகிதங்களை மாற்றம் செய்து உத்திரவிடப்பட்டதை தொடர்ந்து, இந்நகராட்சியில் 28 கடைநிலை பணியாளர்களுக்கு ஊதிய விகிதம் மாற்றம் செய்து உத்திரவிடப்பட்டது. அதன்படி, 28 கடைநிலை பணியாளர்களுக்கும் ஊதியவிகிதம் மாற்றம் செய்து தருமாறு கடிதங்கள் சமர்ப்பித்தனர்.

- திரு. பி.எஸ். அந்தோணிதாஸ், குடிநீர் பிரிவு பணியாளர் கடிதம் நாள் 05.10.2012ல் அரசாணை எண். 338, நிதி (ஊதியக்குழு) துறை, நாள் 26.08.2010 அரசாணையின்படியும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 45529/எப்3/2010-1, நாள் 01.10.2012 காணும் கடிதத்தின்படியும், ஊதியம் நிர்ணயம் செய்து தருமாறும், அதில் திருத்திய ஊதியம் அதிகமாக உள்ளது என பின்னர் தெரியவந்தாலோ, தணிக்கையில் ஆட்சேபனை எழுப்பப்பட்டாலோ அதிகப்படியாக வழங்கப்பட்ட ஊதியத் தொகையினை என்னுடைய மாதாந்திர ஊதியத்தில் இருந்து பிடித்தம் செய்து கொள்ள முழு மனதுடன் சம்மதிக்கிறேன் என சம்மத கடிதம் சமர்ப்பித்ததன் அடிப்படையில், நகராட்சி ஆணையர், கொடைக்கானல் நகராட்சி செயல்முறை ந.க. எண். 8052/2012/சி1, நாள் 22.10.2012–ன்படி திரு. பி.எஸ். அந்தோணிதாஸ், குடிநீர் பிரிவு பணியாளர் Unskilled என்ற அந்தஸ்துடன் வகைப்படுத்தி அதனடிப்படையில் திருத்தப்பட்ட ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்ட 23.02.2006 முதல் 31.07.2010 முடிய திருத்திய ஊதியம் கருத்தியலாக நிர்ணயம் செய்யப்பட்டு 01.08.2010 முதல் பணப்பயன் பெறவும், தணிக்கைக்குட்படுத்தியும், மேற்படி ஊதிய நிர்ணயம் தணிக்கையில் ஆட்சேபணை எழுப்பப்பட்டால் மறு உத்திரவின்றி கூடுதலான ஊதியம் மாத சம்பளத்தில் பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தணையின் பேரில் உத்திரவிடப்பட்டது.

- 2013-2014, 2014-2015ம் ஆண்டின் தணிக்கைத் தடைபத்திகள் எண்கள் 35, 18ன்படி நகராட்சி பணியாளர்களுக்கு கூடுதலாக நிர்ணயம் செய்து மிகையாக ஊதியம் வழங்கியது – இழப்பு ரூ.5,16,886 வசூலிக்கப்படவேண்டும். மற்றும் பொறியியல் பிரிவு நகராட்சி பணியாளர்களுக்கு கூடுதலாக நிர்ணயம் செய்து மிகையாக ஊதியம் வழங்கியது – இழப்பு ரூ.24,81,930/– வசூலிக்கப்படவேண்டும். நிலுவைத் தொகை ரூ.20,33,583/-பிடித்தம் செய்து தணிக்கைக்கு காண்பிக்கப்பட வேண்டுமென தணிக்கையில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

- நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 45529/எப்3/2010, நாள் 21.05.2015 மற்றும் 01.10.2012ல் உள்ள அறிவுரைகளை இரத்து செய்தும், பின் இணைப்பு பி-ல் குறிப்பிட்டுளள கடைநிலை பணியிடங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு அரசாணை எண். 338, நிதி (ஊதியக் குழு)த் துறை, நாள் 26.08.2010 பொருந்தாது என்றும், Unskilled என்ற அந்தஸ்துடன் வகைப்படுத்தி அதிகப்படியாக நிர்ணயம் செய்யப்பட்ட ஊதியத்தினை ரத்து செய்தும், அதிகப்படியாக வழங்கப்பட்ட ஊதியத்தினை சம்மந்தப்பட்ட அனைத்து பணியாளர்களின் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யவும் அறிவுறுத்தப்பட்டது.

அதனை தொடர்ந்து 28 பணியாளர்களுக்கும் பிடித்தம் செய்வதற்கான உத்திரவு பிறப்பிக்கப்பட்டது. மேலும், நகராட்சி ஆணையர், கொடைக்கானல் நகராட்சி செயல்முறை ந.க.எண். 8052/2012/சி1, நாள் 25.06.2015-ன் படி, 01.08.2010 முதல் 31.05.2015 முடிய கூடுதலாக அனுமதிக்கப்பட்ட ஊதியத்தொகை ரூ.129307/-ஐ 36 தவணைகளில், மாதம் 3500/-வீதமும், 37வது தவணையில், ரூ.3307/-ம் ஆக மொத்தம் 37 தவணைகளாக, மாத ஊதியத்தில் பிடித்தம் செய்யவும் உத்திரவிடப்பட்டது.

- கூடுதலாக வழங்கப்பட்ட தொகையினை பிடித்தம் செய்யக்கூடாது என தெரிவித்து நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதமன்ற மதுரை கிளை நீதிப்பேராணை மனு எண். 11357/2015 மற்றும் 23167/2019 மற்றும் M.P. (MD) No. 2 and 3/2015ல் வழக்கு தொடரப்பட்டு, இடைக்கால தடை பெற்றனர். சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதிப்பேராணை மனு எண். 11357/2015 மற்றும் 23167/2019 வழக்கின் தீர்ப்பு நாள் 24.02.2020–ன்படி 7வது ஊதியக்குழு ஊதியம், அகவிலைப்படி, வருடாந்திர ஊதிய உயர்வு, ஒப்புவிப்பு ஊதியம், ஆகிய பணப்பயன் வழங்குமாறு உத்திரவிடப்பட்டது. 24.02.2020 அன்று வரப்பட்ட தீர்ப்பினை எதிர்த்து, கொடைக்கானல் நகராட்சி சார்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை மேல்முறையீட்டு வழக்கு எண். W.A. (MD) No. 892/2020 and CMP (MD) 4869/2020 வழக்கின் தீர்ப்பு நாள் 27.11.2023–ன்படி திரு. பி.எஸ். அந்தோணிதாஸ் என்பவருக்கு ஆணையர், கொடைக்கானல் நகராட்சி 1671/2025/சி1, நாள் 04.10.2022 தேதிய கடிதம் காணும் செயல் முறைகளில் 7வது ஊதியக் குழு ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டதை தொடர்ந்து, இவ்வலுவலக 25.11.2024ம் தேதிய செயல்முறைகளின்படி உரிய ஊதிய விகிதத்தில் நிர்ணயம் செய்யப்பட்டு, ஈட்டிய விடுப்பு மற்றும் ஈட்டா விடுப்பு தொகை கணக்கீடு செய்து, கூடுதலாக வழங்கப்பட்ட ஊதியத்தினை பிடித்தம் செய்து மீதம் தொகை அனுப்பிவைக்கப்பட்டது. ஆனால், அதனை பெறாமல் தனியரால் நகராட்சிக்கு திருப்பி அனுப்பிவிடப்பட்டது. தனியருடன் சேர்ந்து வழக்கு தொடர்ந்த 27 பணியாளர்களும் தங்களுக்கு வழங்கப்பட்ட மிகை ஊதியத்தினை பிடித்தம் செய்து மீதம் வழங்குமாறு தெரிவித்தனர். அதன்படி, 7வது ஊதியக்குழுவின் பரிந்துரையின்படி, ஊதியம் நிர்ணயம் செய்து நிலுவைத் தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்பட்டு மீதம் ஊதியம் வழங்கப்பட்டது. நீதிமன்ற வழக்கு 27.11.2013–ன்படி தீர்ப்பின் அடிப்படையிலேயே சம்பந்தப்பட்ட அனைத்து பணியாளர்களுக்கும் ஊதியம் வழங்கப்பட்டுள்ளது.

- திரு. பி.எஸ். அந்தோணிதாஸ் என்பவர் பணி ஒய்வு பெறுவதற்காக வழக்கில் இருந்து தன்னை விடுவித்து கொள்கிறேன் என்று தெரிவித்து, பணி ஓய்வுக்கு பின் மறுபடியும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை தீர்ப்பாணை நாள் 24.09.2024 (இவ்வலுவலகத்திற்கு வரப்பட்ட நாள் 16.12.2024)ல் காணும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண். W.P. (MD) 18751/2018,W.M.P. (MD) 16588/2018 வழக்கு தொடர்ந்ததன், தீர்ப்பாணை நாள் 24.09.2024ல்,) சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதிப்பேராணை மனு எண். 11357/2015 மற்றும் 23167/2019 தீர்ப்பு நாள் 24.02.2020 தீர்ப்பின் படி ஊதியம் வழங்குமாறு உத்திரவிடப்பட்டுள்ளது.

- ஆனால், 24.02.2020 வரபெற்ற தீர்ப்பினை எதிர்த்து கொடைக்கானல் நகராட்சி சார்பாக மேல் முறையீடு வழக்கு தொடரப்பட்டதில் 27.11.2023ல் தீர்ப்பில் உரிய ஊதிய விகிதம் நிர்ணயம் செய்து, ஓய்வூதிய பணப்பயன்கள் வழங்குமாறு உத்திரவிடப்பட்டுள்ளது. பொதுவாக ஒரு வழக்கின் உத்திரவினை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்பட்ட வழக்கு தீர்ப்பின் உத்திரவின் அடிப்படையில்தான் செயல்பாடுகள் இருக்கப்பட வேண்டும். அதன்படி, சம்பந்தப்பட்ட அனைத்து பணியாளர்களுக்கும் தனியருக்கும் உரிய ஊதிய விகிதத்தில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசாணைகளின்படி, ஊதிய விகிதம் கூடுதலாக அனுமதிக்கும்போது, திரு.பி.எஸ். அந்தோணிதாஸ் என்பவர் தணிக்கை மற்றும் சட்டவிதிகளுக்குட்பட்டு பணப்பயன் வழங்குமாறும், திருத்திய ஊதியத்தில் தணிக்கை ஆட்சேபணை எழுப்பபட்டால் எனது மாத ஊதியத்தில் பிடித்தம் செய்து கொள்ளலாம் என்று சம்மதக் கடிதம் சமர்ப்பித்துவிட்டு, பின்னர் தணிக்கையில் ஆட்சேபனை எழுப்பப்பட்டதையும், அரசாணை பிறப்பிக்கப்பட்டு கூடுதல் தொகையினை ஊதியத்தில் பிடித்தம் செய்ய உத்திரவிடப்பட்டதையும், எதிர்த்து நீதிமன்றம் நாடுவதும், வழக்கு மேல் வழக்கு தொடர்வதும் வாடிக்கையான செயலாகவும், நகராட்சி பணிக்கு இடையூறு ஏற்படுத்துவதும் செயலாக உள்ளது என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

4) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான கொடைக்கானல் நகராட்சி ஆணையாளர் 29.12.2025 அன்றைய விசாரணையில் ஆஜராகும்படி இம்முறைமன்ற நடுவ 11.12.2025 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் அறிவுறுத்தப்பட்டது.

5) மனுதாரர் 29.12.2025 அன்றைய விசாரணையில் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

"நான் கொடைக்கானல் நகராட்சியில் 1978ம் ஆண்டில் Water supply leak arrest பணியில் தினக்கூலியாக பணியில் சேர்ந்தேன். எனக்கு பிறகு 1990 முதல் 1995 வரை பணியில் அமர்த்தப்பட்டவர்களுக்கு 01.04.2003க்கு முன்னர் பணி வரன்முறைப்படுத்தப்பட்டு, ஓய்வூதியம் பெற தகுதி பெற்றுள்ளார்கள். ஆனால் பணியில் மூத்தவரான எனக்கு ஓய்வூதியம் கிடைக்கவில்லை.

எனவே, அரசாணை G.O.(D) No.613 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ME3) துறை நாள் 24.10.2025–ல் நகராட்சியில் NMR ஆக பணியாற்றியவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கு வழங்கப்பட்ட அறிவுரையின் அடிப்படையில் 1978 முதல் கொடைக்கானல் நகராட்சியில் NMR ஆகப்பணிபுரிந்து பின்னர் பணிவரன்முறை செய்யப்பட்ட எனக்கும் ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியப்பலன்கள் வழங்குவதற்கு கொடைக்கானல் நகராட்சி ஆணையருக்கு ஆணை வழங்க மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் முன்பு பணிந்து வேண்டிக்கேட்டுக்கொள்கிறேன்."என தெரிவித்துள்ளார்.

6) எதிர்மனுதாரரான கொடைக்கானல் நகராட்சி ஆணையர் தனது 26.12.2025 நாளிட்ட கடிதத்தில் தனக்கு இந்திய தேர்தல் ஆணையத்தால் விசாரணைக்கு ஆஜராகக்கோரி கடிதம் வரப்பட்டுள்ளதாலும், வழங்கப்பட்ட SIR படிவம் தொடர்பான பணிகள் நடைபெற்று வருவதாலும், நகர்மன்ற மாதாந்திரக்கூட்டம் நடைபெறவுள்ளதாலும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஆய்வுக்கூட்டம் நடைபெறவுள்ளதாலும் தன்னால் வர இயலாத நிலையை தெரிவித்து

29.12.2025 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு சம்மந்தப்பட்ட பிரிவு எழுத்தர் திருமதி.ந.சங்கீதா, உதவியாளர் என்பவரை அனுமதிக்கக் கோரியதனடிப்படையில், கொடைக்கானல் நகராட்சி உதவியாளர் 29.12.2025 விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"மனுதாரர் மனுவில் அன்னாருக்கு பிறகு பணியில் சேர்ந்த பிற பணியாளர்களுக்கு 2003–ல் பணி நிரந்தரம் செய்யப்பட்டதாக தெரிவித்துள்ளார். அரசாணை எண்.125ல் உரிய கல்வி தகுதியிருப்பின் அதன் அடிப்படையில் இளநிலை உதவியாளர், வருவாய் உதவியாளர், நகரமைப்பு ஆய்வர் பணியிடங்கள் மற்றும் ஓட்டுநர் உரிமம் பெற்றிருப்பின் ஓட்டுநர் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டுமென்ற உத்தரவிற்கிணங்க மேற்படி நபர்களுக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மனுதாரருக்கு கல்வி தகுதியில்லாததால் அரசாணை எண் 125ன்படி பணி வழங்கப்படவில்லை.

மனுதாரர் திரு.P.S.அந்தோணிதாஸ் என்பவர் அரசாணை (நிலை) எண்.198, நாள் 26.10.1998ன்படி ரூ.1700/– என்ற தொகுப்பூதியத்தில் 20.03.2001–ல் பணியமர்த்தப்பட்டு, அரசாணை (நிலை) எண்.21, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 23.02.2006ன்படி அடிப்படையில் பணி வரன்முறை செய்யப்பட்டது.

மேலும் மனுதாரர் 01.01.2007 முதல் வருடாந்திர ஊதிய உயர்வு, 6–வது ஊதியக்குழு பரிந்துரையின்படி ஊதியமும் பெற்றுள்ளார். 7 ஆண்டுகளுக்கு பின்னர் காலமுறை ஊதியம் ரூ.2550/–ஐ எதிர்த்து மனுதாரரால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தொடரப்பட்ட வழக்கு எண்.11720/2012 மற்றும் 11721/2012–ல் 02.04.2013 மற்றும் மறு பரிசீலனை மனு எண். 28/2013, 08.07.2013 தேதிய தீர்ப்பில் 3 ஆண்டுகளுக்கு பின்னர் காலமுறை ஊதியத்தில் நியமனம் செய்ய வேண்டும் என உத்தரவிடப்பட்டதனடிப்படையில் காலமுறை ஊதியத்திற்கு கொண்டு வரப்பட்டது.

மேலும் இன்றைய விசாரணையில் மனுதாரர் சமர்ப்பித்த அரசாணை எண்.G.O.(D) No.613 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ME 3) துறை நாள் 24.10.2025–ன்படி நகராட்சியில் NMR ஆக பணியாற்றிய காலத்தில் 50 விழுக்காடு நிரந்தர பணியிடத்தில் பணியாற்றிய காலத்துடன் சேர்த்து அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க தகுதி பணிக்காலமாக எடுத்துக்கொள்ளப்படவேண்டுமென்றும் அவர்களுக்கு GPF கணக்கு துவங்கி GPF கணக்கு எண் ஒதுக்கப்பட வேண்டும் என்றும் அவர்களுக்கு பழைய ஓய்வூதிய திட்டப்படி ஓய்வூதியம் வழங்க தகுதிகாண் பணிக்காலத்திற்கு மேற்படி 50% பணிக்காலத்தை சேர்த்து கணக்கெடுக்கப்பட வேண்டும் என உத்தரவிட்டுள்ளது தொடர்பாகவும், அன்னாருக்கு ஓய்வூதியம் வழங்குவது தொடர்பாகவும், மனுதாரர் கொடைக்கானல் நகராட்சிக்கு மனு செய்யும் நேர்வில் அம்மனு தொடர்பாக நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு உரிய கருத்துரு அனுப்ப கொடைக்கானல் நகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விவரத்தினை மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்கள் முன்பு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

7) மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான கொடைக்கானல் நகராட்சி ஆணையரின் அறிக்கை, கொடைக்கானல் நகராட்சி உதவியாளரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தினால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

மனுதாரர் தான் கொடைக்கானல் நகராட்சியில் 1978ம் ஆண்டு தினக்கூலி பணியாளராக Water Supply Leak Arrest என்ற பணியில் 15.03.1978 முதல் பணியில் அமர்த்தப்பட்டதாகவும், தனக்கு பிறகு 1990 முதல் 1995 வரை நகராட்சி குடிநீர் வழங்கும் பிரிவு மற்றும் பொறியியல் பிரிவு, தெரு விளக்கு பிரிவு மற்றும் நகராட்சிக்கு வரவேண்டிய பல்வேறு தொகைகளை வசூல்

செய்வதற்கும் தன்னைப்போன்று தினக்கூலி அடிப்படையில் சுமார் 43 பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டனர் எனவும், தானே பணிமூப்பில் முதன்மையானவன் எனவும், தன்னை புறந்தள்ளி தனக்குப்பின்னர் தினக்கூலி அடிப்படையில் பணியில் சேர்ந்துள்ள சுமார் 20 நபர்களை 01.04.2003க்கு முன்னர் பணி வரன்முறை செய்யப்பட்டு ஓய்வூதியம் பெற தகுதியுடையவர்களாக ஆக்கப்பட்டுள்ளனர் எனவும், அரசாணை எண் (நிலை) 125, ந.நி(ம) கு.வ.துறை நாள் 27.05.1999ன்படி உள்ளாட்சி அமைப்புகளில் பணியாற்றும் தினக்கூலி பணியாளர்களின் பணியினை வரைமுறைப்படுத்தவும் மற்றும் மாதம் ரூ.2000/– தொகுப்பூதியத்தில் நுழைவு பணியிடங்களில் அவர்களை பணியமர்த்தி ஓராண்டு பணி முடித்த பின்னர் முறையான ஊதிய விகிதத்தில் பணியமர்த்த ஆணையிடப்பட்டது எனவும், அதன்படி 20.03.2001–ல் மாத ஊதியம் ரூ.2000/– என தொகுப்பூதியத்தில் மேற்கண்ட 43 தினக்கூலி பணியாளர்களும் முறைப்படுத்தப்பட்டதாகவும், இவர்களில் பணியில் மூத்தவரான தன்னை புறந்தள்ளி 20 தினக்கூலி பணியாளர்களை 01.04.2003க்கு முன்னர் முறையான ஊதிய விகிதத்தில் நியமனம் செய்துள்ளனர் எனவும், எனவே 1978ம் ஆண்டு முதல் தினக்கூலி பணியாளராக பணியில் சேர்ந்து தொடர் பணியில் பணிபுரிந்து வந்த தன்னை தனக்கு பின் பணியில் சேர்ந்தவர்களை பணிவரன் செய்துள்ளதுபோல் 01.04.2003க்கு முன்னர் பணி வரன்முறை செய்தும் ஊதிய ஏற்ற முறையில் தன்னையும் சேர்த்து உத்தரவிட ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளார். மேலும் நீதிமன்ற உத்தரவின்படி கூடுதலாக வழங்கப்பட்டுள்ளதாக கூறி தன்னிடம் பிடித்தம் செய்த தொகை முழுவதையும் மீள வழங்கிட ஆவன செய்ய வேணுமாய் இம்முறைமன்ற நடுவத்தை கோரியுள்ளார்.

அரசாணை எண்.125ல் உரிய கல்வி தகுதியிருப்பின் அதனடிப்படையில் இளநிலை உதவியாளர், வருவாய் உதவியாளர், நகரமைப்பு ஆய்வர் பணியிடங்கள் மற்றும் ஓட்டுநர் உரிமம் பெற்றிருப்பின் ஓட்டுநர் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டுமென்ற உத்தரவிற்கிணங்க மனுதாரர் பணியில் சேர்ந்த பிறகு பிற பணியாளர்களுக்கு 2003ல் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளதும், மனுதாரருக்கு கல்வி தகுதியில்லாததால் அரசாணை எண்.125ன்படி பணி வழங்கப்படவில்லை என்பதும், மனுதாரரை அரசாணை (நிலை) எண்.198, நாள் 26.10.1998ன்படி ரூ.1700/– என்ற தொகுப்பூதியத்தில் 20.03.2001ல் பணியமர்த்தப்பட்டு அரசாணை (நிலை) எண்.21, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 23.02.2006ன்படி பணி வரன்முறை செய்யப்பட்டுள்ளதும், மனுதாரர் 01.01.2007 முதல் வருடாந்திர ஊதிய உயர்வு, 6–வது ஊதியக்குழு பரிந்துரையின்படி ஊதியம், 7 ஆண்டுகளுக்கு பின்னர் காலமுறை ஊதியம் ரூ.2550/–ஐ எதிர்த்து மனுதாரரால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தொடரப்பட்ட வழக்கு எண்.11720/2012 மற்றும் 11721/2012–ல் 02.04.2013 மற்றும் மறு பரிசீலனை மனு எண்.28/2013, 08.07.2013 ஆகிய தேதிய தீர்ப்பில் 3 ஆண்டுகளுக்கு பின்னர் காலமுறை ஊதியத்தில் நியமனம் செய்ய வேண்டும் என உத்தரவிட்டதனடிப்படையில் காலமுறை ஊதியத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதும், கொடைக்கானல் நகராட்சி உதவியாளரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

இந்நேர்வில், விசாரணை அன்று மனுதாரர் சமர்ப்பித்த அரசாணை எண்.G.O.(D) No.613 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ME 3) துறை நாள் 24.10.2025ன்படி நகராட்சியில் NMR ஆக பணியாற்றிய காலத்தில் 50 விழுக்காட்டினை நிரந்தர பணியிடத்தில் பணியாற்றிய காலத்துடன் சேர்த்து அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க தகுதி பணிக்காலமாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்றும் அவர்களுக்கு GPF கணக்கு துவங்கி GPF கணக்கு எண் ஒதுக்கப்பட வேண்டும் என்றும் அவர்களுக்கு பழைய ஓய்வூதிய திட்டப்படி ஓய்வூதியம் வழங்க தகுதிகாண் பணிக்காலத்திற்கு மேற்படி 50% பணிக்காலத்தை சேர்த்து கணக்கெடுக்கப்பட வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு மனுதாரருக்கு ஓய்வூதியம்

வழங்குவது தொடர்பாக மனுதாரர் கொடைக்கானல் நகராட்சிக்கு மனு செய்யும் நேர்வில் அம்மனு தொடர்பாக நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு உரிய கருத்துரு அனுப்ப கொடைக்கானல் நகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்படும் என கொடைக்கானல் நகராட்சி தரப்பில் விசாரணைக்கு ஆஜரான கொடைக்கானல் நகராட்சி உதவியாளர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளதனடிப்படையில் தொடர் நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளும்படி கொடைக்கானல் நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2026ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள் 12–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. P.S. அந்தோணிதாஸ்,
   த/பெ. திரு. சவரிதாஸ்,
   15/267/A2, நாயுடுபுரம் (P.O).
   கொடைக்கானல் 624 101, திண்டுக்கல் மாவட்டம்.
2. நகராட்சி ஆணையர்,
   கொடைக்கானல் நகராட்சி, திண்டுக்கல் மாவட்டம்.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,எம்.ஆர்.சி.நகர்,
   சென்னை – 600 028.
4. இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இகோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

16/2/26
செயலாளர்.